அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை: 01/2014(VIII)

எனது இலக்கம்:EST-2/05/POL/0059
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ
மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.10.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனை திருத்தியமைத்து வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் தங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

02. அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்திராத அலுவலர்களுக்கு அத் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு மற்றும் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூரணப்படுத்தாமை காரணமாக பதவியுயர்வுகளைப் பெறாத அலுவலர்களுக்கு அப்பதவியுயர்வுகளை வழங்குவதற்காக பின்வரும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2019.08.27 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) அதற்கமைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014(IV) இன் 03 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

“2007.07.01 ஆந் திகதிக்கு முன்னர் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அடிப்படையில் பதவியுயர்வுகள் கிடைக்கப்பெற்று 2019.01.01 ஆந் திகதிக்கு 50 வயதினைப் பூர்த்தி செய்துள்ள அல்லது 2007.07.01 ஆந் திகதிக்கு முன்னர் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அடிப்படையில் பதயியுயர்வு கிடைக்கும் போது 50 வயதினைப் பூர்த்தி செய்துள்ள அல்லது அலுவலர்கள் தாங்கள் புதியதொரு நியமனம் கிடைக்கப்பெற்று உயர் பதவிக்கு உரித்தான ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுடன் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்துக்கு ஏற்ப நடாத்தப்படும் 100 மணித்தியாலங்களைக் பயிற்சிப் பாடநெறிக்கு பங்குபற்றுவது மாத்திரம் போதுமானதாகும்”.

(ஆ) அவ்வாறே அரசகரும மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்துதல் என்பது பதவியுயர்விற்கான அவசியப்பாடு என்பதாக ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்குவிதி மற்றும் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இதுவரை தர உயர்வுகளைப் பெற முடியாதுள்ள அலுவலர்களுக்கு அரசகரும மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்துவதைத் தவிர ஏனைய தேவைப்பாடுகள் முழுமைப்படுத்தியிருப்பின் அத் தரத்துக்கு பதவியுயர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து பதவியுயர்வுக்கு உரித்தான சம்பள மாற்றத்தை மேற்கொண்டதன் பின்னர் அதையும் மீறிய சம்பள ஏற்றம் ஏனைய அரசகரும மொழித் தேவைப்பாட்டினைப் பூரணப்படுத்தும் வரை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

03. இச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2019.08.27 ஆந் திகதி முதல் அமுல் நடாத்தப்படும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ
மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு